**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை - 2018**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பிரிவில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காவு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- சபையின் பணிப்பாளர் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அதவானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| | **இணக்கமின்மை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2012 செப்டம்பர் 21 திகதியன்று ரூபா 2,500,000 ஆன நிலையான வைப்புக்களில் செய்யப்பட்ட முதலீடு 2018 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 4,326,092 தொகை வரை அதிகரித்திருந்த போதும், இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 66 பிரிவின் பிரகாரம் அவ்வைப்பின் பெறுமதியை நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டிய போதும், நடைமுறை சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆண்டு முதல் சரியாக அறிக்கையிடல் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | நியமம் பிரகாரம் நிலையான வைப்பு சரியாக கணக்கீடு யெ்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 07 இன் 7.அ,ஆ பந்தி பிரகாரம் பிணை வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய போதும் மீளாய்வாண்டில் மக்கள் வங்கி யூனியன் பிரதேச கிளையில் திறக்கப்பட்டுள்ள ரூபா 2,500,000 ஆன நிலையான வைப்பு | 2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் ஊடாக நிதி அறிக்கையிடல் நியமம் 07 இன் பிரகாரம் வெளிப்படுத்தி சமர்ப்பிக்கப்படும். | நியமம் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் போதிய வெளிப்படுத்தல்கள் யெ்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் வொக்ஸ்வோல் வீதி, கொழும்பு 02 முகரியில் அமைந்துள்ள காணி, இலங்கை வங்கி ஹயிட்பார்க் கிளையில் நிலையான வங்கி மேலதிக பற்று வசதியை பெற்றுக் கொள்ள பிணை வைக்கப்பட்டமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் நியமம் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 20 பந்தி பிரகாரம் நேரில் முறைப்படி செயற்பாட்டு நடவடிக்கையின் கீழான தேறிய காசுப் பாய்ச்சலை நிறுவனத்தின் மீளாய்வாண்டின் தேறிய இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு, சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டிய போதும், அதற்கு முரணாக சபையினால் திரண்ட நட்டத்தின் வித்தியாசமான ரூபா 608,391,269 இற்கு அச் சீராக்கத்தை மேற்கொண்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | நியமம் பிரகாரம் ஒப்பீட்டு ரீதியான தகவல்களை போதியவாறு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 42, 43, மற்றும் 49 பந்தி பிரகாரம் கடந்த ஆண்டுகளில் இடம் பெற்ற தவறை பின்நோக்கியதாக சீராக்கிய பின்னர் மீயாய்வாண்டுடன் சமர்பிக்கப்படும் ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சரிசெய்து அது தொடர்பாக போதிய வெளிப்படுத்தல்களை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள வேண்டிய போதும், சபையினால் 2017 ஆண்டில் சொத்துக்கள் மற்றும் உரிமைகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,469,668 ஆன சீராக்கங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் போதிய வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நியமம் பிரகாரம் ஒப்பீட்டு ரீதியான தகவல்களை போதியவாறு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (உ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 13 இன் 37 பந்தி பிரகாரம் பல ஆண்டுகளாக நிதி நிலைமை கூற்றில் ரூபா 935,509 ஆக காண்பிக்கப்பட்டுள்ள சபையின் 17 தோட்டங்களிற்கு உரிய 12,331 ஹெக்டயாரான தனிஉரிமை காணிகளை நியாயமான பெறுமதிக்கு மதிப்பிட்டு கணக்கீடு செய்யதிருக்காததால் நிலையான சொத்துக்கள் குறை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | காணிகளின் பெறுமதி நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்படவில்லை. | நியமம் பிரகாரம் காணிகள் நியாயமான பெறுமதியில் மதிப்பீடு யெய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 37 பந்தி பிரகாரம் ஒரே சமமான தன்மை மற்றும் பயன்பாட்டைக் கொண்ட சொத்துக்களை மாத்திரம் வகைப்படுத்தி கணக்கீடு செய்ய வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதும் அதற்கு முரணாக சபையினால் இயந்திர உபகரணங்கள், | நியமம் பிரகாரம் காட்டுவதனை 2019 கணக்காண்டில் சமர்பிக்கப்படும். | நியமம் பிரகாரம் சொத்துக்களின் தன்மை பிரகாரம் வகைப்படுத்தி கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் ஆகிய அனைத்து உருப்படிகளும் ஒரே உருப்படியின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | | |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 73 (இ) பந்தி பிரகாரம் தோட்டங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தினுள் காணப்படும் 13 சொத்துக்களிற்குரிய பெறுமானத் தேய்வு விகிதம் நிதிக்கூற்றுக்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. இதன் காரணமாக இச் சொத்துக்களில் பெறுமானத் தேய்வு கணிப்பிடும் சரியான தன்மையை பரீட்சிக்க முடியாதுள்ளது. | 13 சொத்துகளின் குறித்த பெறுமானத் தேய்வு விகிதங்களை நிதிக்கூற்றுக்களினுள் சமர்ப்பித்தல் 2019 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட கணக்குகளினுள் சரிசெய்ய நடவக்கை எடுக்கப்படும். | சொத்துகளின் குறித்த பெறுமானத் தேய்வு விகிதங்களை நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57 ஆம் பந்தி பிரகாரம் நிறுவனத்தின் சேவை நலன் கடப்பாடுகளை கணக்கிடும் போது ஆயுள்கணக்கிடல் முறை அதாவது நிறுவனத்தின் நிகழ்கால சேவைகள் கிரயம், ஊழயர்களின் வயது அளவுகள், ஊழியர்களின் ஆயுள் எதிர்பார்ப்பு, சேவை விற்பனைக்கு ஏற்பட்ட தாக்கம், ஓய்வூதிய வயது, வட்ட விகிதம், சம்பளம் மற்றும் வளர்ச்சி சதவீதம் போன்ற எடுகோள்களை பயன்படுத்தி கணக்கிட வேண்டிய போதும், சபையினால் தனது நலன்களை கணக்கிடும் போது மேற்குறிப்பிட்ட ஆயுள்கணக்கிடல் முறையை பயன்படுத்தி இருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஆயுள்க்கணக்கிடல் முறையைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நியமம் பிரகாரம் சேவை நலன் கடப்பாடுகள் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 54 (உ) பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் தொடர்பில் பயனுள்ள ஆயட் காலத்தை அல்லது பயன்படுத்திய பெருமானத் தேய்வு விகிதத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதும், மீளாய்வாண்டில் தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களுக்காக காலக்கழிவு சீராக்கம் செய்யப்பட்டிருந்த போதும், நிதிக்கூற்றுக்களில் பெறுமானத் தேய்விடும் கொள்கைகள் மற்றும் தேய்மான விகிதம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவிலலை. இதன் காரணமாக மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வின் சரியான தன்மையை பரீட்சிக்க முடியாதிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களினுள் நியம இலக்கம் 41 இன் 54 (உ) இன் பிரகாரம் பெறுமானத் தேய்வு விகிதங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நியமம் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் பெருமானத் தேய்வு விகிதத்தை அல்லது பயனுள்ள ஆயட் காலத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய |
| (ஒ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 பின் 12 பந்தி பிரகாரம் உயிரியல் ரீதியான சொத்துக்களை ஆரம்ப இனங்காணலின் போது மற்றும் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவிலும் விற்பனைக்கான | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 41 பிரகாரம் மரப் பயிர்களை மதிப்பிட்டு உயிரியல் விஞ்ஞான ரீதியான சொத்துக்களாக கணக்கீடு | நியமத்தின் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் |

| | | | |
|---|---|---|---|
| | செலவுகளை குறைத்த பின்னர் நியாயமான பெருமதிக்கு அளக்க வேண்டிய போதும், மரப் பயிர்களை அவ்வாறு மதிப்பிட்டு சபையினால் கணக்கீடு செய்திருக்கவில்லை. | செய்யப்படவில்லை. உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் மதிப்பு அதிகரிப்பது நிறுவனத்தின் நிலைத்திருக்கும் தன்மைக்கு பலமாகையால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மரப் பயிர்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் பெறுமானத் தேய்வு கொள்கையாக சொத்துக்களை கொள்வனவு செய்த திகதியிலிருந்து சொத்துக்களின் பெறுமானத் தேய்வு செய்ய ஆரம்பிப்பதாக நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருந்த போதும் 2018, ஆண்டினுள் தோட்டங்களினால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்த திகதியை கவனத்திற் கொள்ளாது மீளாய்வாண்டு முழுவதிற்கும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன், நிலையான சொத்து பதிவேட்டில் கொள்வனவு செய்த திகதி குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. இதன் காரணமால் தோட்டங்களில் மீளாய்வாண்டில் சரியான பெறுமானத் தேய்வினை கணக்கிடும் இயலுமை காணப்படவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களிற்கு பெறுமானத் தேய்வு செய்வதனை காலரீதியாக பெறுமான தேய்வு செய்வதற்கு 2022 ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம் பெறுமானத் தேய்மானத்தை கணக்கிட்டு கண்க்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | சபையின் பெருமானத் தேய்வுக் கொள்கையின் கீழ் தோட்டங்கள் மற்றும் பிரதான அலுவலகத்திற்காக இயந்திர உபகரணங்கள் மற்றும் கணனிகள் மற்றும் கணனி அச்சிடும் இயந்திரங்கள் ஆகிய சொத்துக்களிக்காக பழைய மற்றும் புதிய சொத்துக்களிற்கு ஒரே பெறுமானத் தேய்வு விகிதத்தை பயன்படுத்தாது இரண்டு பெறுமானத் தேய்வு விகிதங்கள் பயன்படுத்துவதாக அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம் சபை திட்டவட்டமான பெறுமான தேய்வு கொள்கை ஒன்றினை பயன்படுத்தி இருக்கவில்லை | ஏற்றுக் கொள்கிறேன். 2022 ஆண்டிலிருந்து ஒரு பெறுமானத் தேய்வுக் கொள்கையை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டவட்டமாக சரியான பெறுமானத் தேய்வுக் கொள்கை பிரகாரம் சொத்துக்கள் பெறுமானத் தேய்விட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்படும் இலக்கம் 3.2.7 | ஏனைய உயிரியல் விஞ்ஞான ரீதியான சொத்துக்கள் | சரியான கணக்கீட்டுக் கொள்கையை |

| | | |
|---|---|---|
| கணக்கிட்டு கொள்கை பிரகாரம் தேயிலை மற்றும் இறப்பரிற்காக மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவுகள் முதிர்ச்சி அடையாத பயிர்களிலிருந்து முதிர்ச்சி அடைந்த பயிர்களிற்கு மாற்றப்படும் காலத்தை குறிப்பாக காட்டியிருந்த போதும், சபையின் தோட்டங்களில் நிலவும் ஏனைய உயிரியல் விஞ்ஞான ரீதியான சொத்துக்கள் அதாவது கொக்கோ, மாங்காய், கருவா, இஞ்சி, சாதிக்காய், பாக்கு, ஏலக்காய், மிளகு போன்ற பயிர்களின் முதிர்ச்சிக் காலத்தை சசையின் கணக்கு கொள்கை ஊடாக வெளிப்படுத்தி இருக்கவில்லை. | தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்க்கீட்டு நியமம் பிரகாரம் கணக்குகளில் உரிய கால எல்லைகள் 2022 ஆண்டு முதல் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | தயாரித்தல், பெளிப்படுத்தல் மற்றும் அதன் பிரகாரம் கணக்கு வைத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூமொறி நிறுவனத்திலிருந்து சபைக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்ட ரூபா 2,177,332 பெறுமதியான தேயிலை இருப்பை இறுதி முடிவு பொருட்களினுள் உள்ளக்காது, பொதியிடல் பொருட்கள் இருப்பினுள் உள்ளடக்கிய காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதி முடிவு பொருட்கள் இருப்பு குறை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பொதியிடல் பொருட்கள் இருப்பு மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது | 2019 ஆண்டில் கணக்கு திருத்தத்தின் போது அப் பெறுமதியை இறுதி முடிவுப் பொருள் இருப்பிற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றினுள் சொத்துக்கள் வகைப்படுத்தப்படும் போது நடைமுறை வேலையின் கீழ் அதற்கு உரித்தற்ற ரூபா 1,761,785 பெருமதியான சிறிய மீன் கருத்திட்டங்கள், நீர் போத்தல் கருத்திட்டம், விசேட கருத்திட்டம் மற்றும் ஏனைய பலவித கருத்திட்டம் ஆகிய 04 உறுப்புகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | கருத்திட்டங்கள் தோல்வியடைந்திருந்தால் பதிவழிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நியமித்துள்ள குழுவின் பரிந்துரையின் மீது 2022 கணக்குகள் திருத்தத்தின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கீழ் கணக்கிட வேண்டிய ரூபா 17,925,652 பெறுமதியான முதிர்ந்த பயிர்கள் ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | 2019 ஆண்டுக்கான கணக்குத் திருத்தத்தின் போது சரிசெய்யப்படும். | இருப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளர்வாண்டிற்கு முன்னர் 2002, 2003 மற்றும் 2012 ஆண்டுகளில் முதிர்ச்சி அடையாத பயிர்களிலிருந்து தவறுதலாக முதிர்ந்த பயிர்களிற்கு மாற்றப்படட ரூபா ரூபா 2,305,369 ஆன இறபர் பயிர்கள் மீளாய்வாண்டில் மீண்டும் முதிர்ச்சி அடையாத பயிர்களிற்கு மாற்றப்பட்டிருந்தன. இந்த பயிர்கள் தற்போது அழிந்து அல்லது ஏனைய காரணங்களால் பௌதீக ரீதியாக காணப்படவில்லையென மேலும் அவதானிக்கப்பட்டன. | முதிர்ச்சியடையாத பயிர்களிற்கு மாற்றப்பட்ட ரூபா 2,305,369 ஆன் இறப்பர் பயிர்கள் தற்போது பௌதீக ரீதியாக காணப்படாததால் குறித்த விபரங்களை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து 2022 ஆம் கணக்காண்டில் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் பௌதீக ரீதியாக காணப்படாமைக்கான காரணங்களை இனங்காண மற்றும் கணக்குகளிலிருந்து அகற்ற தாமதமின்றி கடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | நிதிககூற்றுகள் பிரகாரம் கண்டல்ஓய தோட்டத்தின் 1996 மற்றும் 1998 ஆண்டுகளில் பயிரிடப்பட்ட ரூபாய் 1,936,455 ஆன ஏலப் பயிர்கள் காணப்பட்ட போதும், பௌதீக ரீதியான பரிசோதனையின் போது இந்த பயிர்கள் தற்போது பௌதிக ரீதியாக காணப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. அப் பயிர்கள் காணப்பட்ட நிலங்கள் தற்போது பயிற்றப்படாத நிலங்களாக காணப்படுவதாக மேலும் அவதானிக்கப்பட்டது. | ஏலப் பயிர்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு 2022 ஆம் ஆண்டின் கணக்குத் திருத்தத்தில் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இக் கருத்திட்டம் தோல்வியடைவதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காணல், சேதத்தை மீள்நிரப்பிக் கொள்ளல் மற்றும் பௌதீக ரீதியாக காணப்படாத சொத்துக்களை இனங்கண்டு கணக்குகளிலிருந்து விரைவில் அகற்ற வேண்டும். |
| (ஊ) | சபையினால் ஒவ்வொரு வருடமும் விற்பனை செய்யப்படும் வர்த்தக பெருமதியுடைய மரங்களின் பெருமதியை நிதிக்கூற்றுகளின் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்காததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 7,399,067 பெறுமதியான மரங்கள் வெட்டி அகற்றப்பட்டிருந்த போதும், கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து வர்த்தக பெறுமதியுடன் கூடிய மரங்களின் பெறுமதிகள் நிதிக் கணக்குகளில் உயிரியல் சொத்துக்களாக கணக்கிடப்படவில்லை. தேவையான சீராக்கங்களை 2022 கணக்காண்டினுள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு சொந்தமான உயிரியல் சொத்துக்களை சரியாக கணக்கு வைக்க மற்றும் விற்பனை செய்யப்பட்ட மரங்களின் கிரயத்தை அந்த சொத்துக்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 1996 ஆண்டு முதல் நடைமுறை வேலைகளின் கீழ் காணப்படும் ரூபா 3,197,505 ஆன 5 தோட்டங்களின் மீதிகள் மீளாய்வாண்டில் செம்மையாக்க கணக்கொன்றிற்கு வரவு வைத்து நிதி நிலைமை கூற்றில் வாடகை கொள்வனவு சொத்துக்கள் மற்றும் நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன. இந்த மீதிகள் தொடர்பாக பரிசோதனை செய்து | 2022 கணக்கு திருத்தத்தின் போது பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மீது பதிவழக்க நடவடிக்கை எடுக்கப்படும். | தோட்டங்களின் நடைமுறை வேலை மீதிகள் தொடர்பாக பரீட்சித்து அந்த வேலைகயை பூர்த்தி செய்ய அல்லது மூலதனமாக்க ஒழுங்கான முறைமையொன்றை பின்பற்றி கணக்குகளிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக்க, வேலைகளை பூர்த்தி செய்வதற்கு அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | பதிவழிக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | சபையின் நிதிக்கூற்றுகள் பிரகாரம் மீளாயவாண்டில் ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களை சுவீகரித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமாக ரூபா 5,189,961 தொகை இனங்கண்டிருந்த போதும் காசு காய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள் சுவீகரிப்பிற்கான எவ்வித செலவையும் செம்மையாக்கி இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | மீளாய்வாண்டில் காசாக செலுத்தி சுவீகிக்கப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி முதலீட்டு செய்ற்பாடுகளின் கீழ் சாசுப் பாய்சலிற்கு செம்மையாக்கப்பட வேண்டும். |
| (ஐ) | சபையின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீளாய்வாண்டில் உயிரியல் விஞ்ஞான சொத்து சேர்ப்பனவு ரூபா 32,062,532 தொகை மற்றும் கற்புலனாகாத சொத்து அகற்றல் ரூபா 2,230,368 ஆன போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் இந்த காசு வெளிப் பாய்ச்சல் மற்றும் உற்பாய்ச்சல் காண்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப் பாய்ச்சல் மற்றும் உற்பாய்ச்சல் சரியாக காண்பிக்கப்பட வேண்டும் |
| (ஒ) | சிலாபம் பெருந்தோட்டம் மற்றும் அரச முகாமைத்துவ சபை (SRMC) ஆகிய நிறுவனங்களிற்கு மீளாய்வாண்டில் மேற்கொண்ட வட்டி செம்மையாக்கல்களான ரூபா 3,579,800 தொகையை சபை நிதி செயற்பாடுகளின் கீழ் கடன் தொகை பெற்றுக் கொள்ளல் (காசு உட்பாய்ச்சல்) ஆக இனங்கண்டிருந்த காரணத்தால் ரூபா 3,579,800 இனால் நிதி செயற்பாடுகளின் கீழான தேறிய காசுப் பாய்ச்சல் அதிகரித்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி செய்ற்பாடுகள் சரியாக செம்மையாக்கப்பட வேண்டும் |
| (ஓ) | மீளாய்வாண்டினுள் புத்தகங்களில் இருந்து அகற்றப்பட்ட பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 4,841,741 ஆன முதிர்ச்சி அடையாத இறபர் பயிர்கள், காசு பாய்ச்சல் கூற்றில் நட்டத்துடன் சேர்க்கப்பட்ட காரணத்தல் அப்பெறுமதியால் செயற்பாட்டினூடாக உருவான தேறிய காசுப் பாச்சல் அதிகரித்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | காசுப் பாய்ச்சல் கூற்றில் செய்ற்பாட்டு நடவடிக்கைகளை சரியாக செம்மையாக்க வேண்டும் |
| (ஔ) | சபையினால் தயாரிக்கப்படும் ஜர்னல் வவுச்சரில் தயாரிக்கும் அலுவலர் மாத்திரம் கையொப்பமிட்டுள்ள | குறித்த ஜர்னல் வவுச்சர்களை அங்கீகரிக்க நடவக்கை எடுக்கப்படும். | ஜர்னல் வவுச்சர் தயாரிக்கும், பரிசோதிக்கும் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | போதும் ஜர்னல் வவுச்சர் பரிசோதித்த அலுவலர் மற்றும் அங்கீகரித்த அலுவலர் கையொப்பம் இட்டிருக்கவில்லை. | | அங்கீகரிக்கும் அலுவலர்கள் கையொப்பமிட வேண்டும். |
| (க) | முதிர்ச்சியடையாத தேயிலை பயிர்கள் முதிர்ச்சியடைய 4 வருடங்கள் செல்வதாக கணக்குகள் மூலம் வெளிப்படுத்தியிருந்த போதும், 2007 முதல் 2013 ஆண்டு வரை பயிரிடப்பட்ட 5 ஆண்டுகள் முதல் 11 ஆண்டுகள் வரை ரூபா 29,011,699 ஆன தேயிலை பயிர்கள் முதிர்ந்த தேயிலை பயிர்களாக மாற்றப்பட்டு இருந்தது மீளாய்வாண்டிளாகும். | கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2017 ஆண்டில் கிடைந்த கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் உயிரியல் சொத்துக்களின் பெறுமானத் தேய்வினை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சலில் வெளிப்படுத்தியிருந்த கொள்கை பிரகாரம் முதிர்ந்த பயிர்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (கா) | 1992 ஆண்டில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் பிரதேச தோட்டக் கம்பனிகளிற்கு ஒப்படைக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கி இருக்கவில்லை. | 1992 ஆண்டில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் பிராந்திய தோட்ட கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்கள் பற்றிய தகவல்கள் நிதிப் பிரிவில் இல்லை. அதனால் இந்த சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பிட அல்லது வெளிப்படுத்தவில்லை. | பிராந்திய தோட்ட கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்கள் பற்றிய விபரங்கள் சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (கி) | சபையினால் 2018 திசெம்பர் 31 தியதிளவில் ரூபா 37,796,794 ஆன காணி குத்தகை வாடகை வருமானத்தை மற்றும் ரூபா 36,553,920 ஆன கட்டிட வாடகை வருமானத்தை உழைத்து இருந்த போதும் நிதிக்கூற்றுகளிலுள்ள மூதலீட்டு ஆதனங்களின் கீழ் இந்த குத்தகை வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை வெளிப்படுத்தி இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (கீ) | மீளாய்வாண்டு இறுதியில் சபையில் காணப்படும் தேறிய பெறுமதி ரூபா 458,732,760 ஆன தேயிலை, தேங்காய், இறப்பர் போன்ற உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் மீதான மதிப்பீடொன்றை மேற்கொள்டு அவற்றின் நிலைத்திருக்கும் தன்மையை உறுதி செய்துகொண்டிருக்கவில்லை. | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் பற்றிய அறிக்கைகள் தற்போது ஜனவசம இனால் தயாரிக்கப்படாததுடன் அது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையொன்றை அனைத்து தோட்டங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். மேலும் 2022 ஆம் கண்க்காண்டிற்காக அந்த | ஒவ்வொறு ஆண்டும் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் தொடர்பான மதிப்பீடொன்றை மேற்கொண்டு அதன் நிலைத்திருக்கும் தன்மையை உறுதி செய்து கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கையை பெற்றுக் கொள்ள செயற்பட்டுள்ளது. | |
| (கு) | சபையினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) செலுத்த வேண்டிய பணத்தை உரியவாறு செலுத்தாததன் காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 340,623,374 ஆன தண்டப் பணத்தை செலுத்த வேண்டியிருந்த போதும் இந்த பொறுப்பு தொடர்பாக எவ்வித ஒதுக்கீடும் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2001 ஆண்டு முதல் நிறுவனம் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடி காரணமாக உரிய திகதியில் நியதிச்சட்ட பொறுப்புக்களை செலுத்த முடியாததன் மீது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தண்டப் பணத்தை செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த பொறுப்புக்களை உரியவாறு அனுப்பியிருப்பின் அந்த சிக்கனமற்ற செலவை தவிர்த்துக் கொள்ள முடியுமாக இருக்கும். | நியதிச்சட்ட பொறுப்புக்களை உரிய திகதியில் தீர்க்க மற்றும் மிகை அறவீட்டை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கூ) | வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவற்றினுள் தோட்டங்களினால் வெளித் தரப்பினர்களிடமிருந்து பலதரப்பட்ட காரணங்களிற்காக அறவிடப்பட்ட இதுவரை இறுதி கணக்குகளினுள் ஆண்டின் வருமானமாக இனங்காணாத ரூபா 866,884 ஆன தொகை காணப்பட்டது. | ஆண்டின் வருமானத்திற்கு இனங்காணாத ரூபா 866,884 ஆன தொகை ஆண்டின் வருமானமாக 2019 ஆண்டு கணக்குகளினுள் சரியாக காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் வருமானத்தை சரியாக இனங்காண வேண்டும். |
| (கெ) | கந்தல்ஓய மற்றும் நாகஸ்தென்ன தோட்டங்களின் நிதிக்கூற்றுக்களில் 2011 செப்டம்பர் 09 ஆம் திகதி ரூபா 2,787,206 ஆன பணம் காணாமல் போனது தொடர்பாக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், அது தொடர்பில் சபை நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தல அல்லது ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன் இத் தொகையை மீள் அறவிட முடியாதிருந்தது. | பணம் காணாமல் போனமை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் முன்னேற்றத்தை அறிந்து இந்த இழப்பின் முழுத் தொகையை கணக்குகளில் இருந்து பதிவழிக்க தேவையான தகவல்களை பிரதான அலுவலகத்திற்கு அனுப்ப அத்தோட்டங்களிற்கு அறிவிக்கப்பட்டது. | நிதிரீதியான நட்டம் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் தேவையான ஒதுக்கீடு மற்றும் வெளிப்படுத்தல் மேற்கொள்ள வேண்டும். |
| (கே) | பெறுந்தோட்ட அமைச்சின் தோட்ட முகாமைத்துவ மேற்பார்வை பிரிவினால் (PMMD) செயற்படுத்தி இருந்த தோட்ட அபிவிருத்திக் கருத்திட்டம் 2010 ஆண்டில் முடிவடைந்திருந்த போதும் அக்கருத்திட்டத்திற்குரியதாக 2018 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 4,136,733 தொகை அவ் அமைச்சிலிருந்து மீள் நிரப்பப்படாத கடன்படுனர் மீதியொன்றாக சபையின் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. | இக்கருத்திட்டம் 2010 அளவில் முடிவுறுத்தப்பட்டது. அச் சந்தர்ப்பத்தில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு மீளளிக்கப்படாத தொகை ரூபா 4,136,733 ஆகும். இக் கருத்திட்டம் மற்றும் நிறுவனம் தற்போது செயற்படாததால் தேவையான கணக்கு திருத்தங்களை 2020 ஆம் ஆண்டில் மேற்கொண்டு பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்படாத நீண்ட கால கருத்திட்டங்களினால் மீளளிக்கப்படாத கடன்படுனர் மீதி தொடர்பாக பொறுப்பு வாயந்த தரப்பினரிற்கு எதிராக தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய அங்கீகாரம் மீது இந்த மீதியை கணக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கை) | 2001 ஆண்டில் குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட மொன்த கிறிஸ்டோ தோட்டத்தின் தேறிய சொத்துக்கள் பெறுமதி ரூபா 40,503,226 தொகை 17 ஆண்டுகளாக கடன்படுனராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் இந்த மீதி தொடர்பாக திட்டவட்டமான தெளிவு படுத்தல்கள் இல்லாததுடன், இதனை அறவிட முடியாதென அவதானிக்கப்பட்ட போதும் நிதிக்கூற்றுக்களில் ஐயக்கடன் ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2001 ஆண்டளவில் இந்த தோட்டம் குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு ஒப்படைத்த பின்னர் அந்த தோட்டத்திற்காக தேறிய சொத்துக்களின் பெறுமதிப்பான ரூபா 40,503,226 ஆன பெறுமானமொன்று பிரதான அலுவலக கணக்குப் புத்தகங்களில் காட்டப்படுகிறது. இந்த மீதி 2001 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை தொடரந்து நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய மீதி தொடர்பாக திட்டவட்டமான தெளிவு படுத்தல்கள் கணக்காய்விற்கு வழங்க வேண்டியதுடன் மீதி உறுதிப்படுத்தல் மூலம் அந்த மீதிகளை உறுதி செய்து கொள்ள வேண்டும். அவ்வாறே இம் மீதிகளை நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்ய வேண்டும். |
| (கொ) | கவனத்திற் கொள்ளப்படும் நிதியாண்டில் கட்டிட வாடகை வருமானம் ரூபா 36,553,920 ஆன போதும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி அறிக்கை பிரகாரம் ரூபா 18,496,844 ஆனதில் தேசத்தை கட்டியெழுப்பும் வரி கணிப்பிடும் போது அச் சட்டத்தின் 3 (2) (iii) இணங்காத வகையில் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 361,141 (18,057,076 * 2 %) இனால் குறை மதிப்பீடாகியிருந்தது. | காணி, கட்டிட குத்தகை வாடகை ஒப்பந்தங்களில் உள்ள தவறான குறைபாடுகள் காரணமாக பெற வேண்டிய குத்தகை வாடகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்ட போதும் அந்த குத்தகை தொகை உரிய நேரத்தில், உரிய தொகை கிடைக்காததால் காசு அடிப்படையில் அறிக்கைகள் தயார் செய்யப்படடன. ஏனெனில் கிடைக்காத வருமானம் தொடர்பாக குத்தகை தொகை செலுத்த போதிய செயற்படு மூலதனம் நிறுவனத்தில் இல்லாததாகும். | தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் அந்த வரியை கணக்கிட வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டப்பாட்டு கணக்குகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கை பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | பணிக்கொடை ஒதுக்கக் கணக்கில் மீதி | 504,888,251 | 504,793,974 | 94,277 | பணிக்கொடை கொடுப்பனவு கணக்கிடல் தொடர்பாக சரியான அறிக்கையை பெற்றுக் கொள்ள பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது கணக்காய்வு நிறுவனமொன்றிற்கு ஒப்படைத்து பெற்றுக் கொண்ட சரியான | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நேரொத்த அறிக்கையை பேணிக் கொள்ள வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கணக்கிடலின் பின்னர் மூன்று தோட்டங்களில் சுட்டிக்காட்டியுள்ள வித்தியாசங்கள் 2019 ஆண்டில் சீராக்கப்பட்டு உள்ளன. | |
| (ஆ) | பணிக்கொடை கணக்கின் மீதி | 463,392,621 | 467,753,167 | 4,360,546 | சுட்டிக்காட்டியுள்ள வித்தியாசங்கள் 2019 ஆண்டில் சீராக்கப்பட்டு உள்ளன. | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நேரொத்த அறிக்கையை பேணிக் கொள்ள வேண்டும். |
| (இ) | பணிக்கொடை தொடர்பான மிகை அறவீடு ஒதுக்கக் கணக்கின் மீதி | 143,202,687 | 144,920,316 | 1,717,629 | சபையின் 2018 ஆம் ஆண்டுக்கான பணிக்கொடை மிகை அறவீடு ஒதுக்கக் கணக்கின் மீதி நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் இந்த தோட்டங்களில் அதாவது ஹந்தான, லெவெல்லன், ரூக்வூட், லுல்கந்துகர, நாகஸ்தென்ன மற்றும் கந்தல்ஓய ஆகிய தோட்டங்களின் அட்டவணைகள் பிரகாரம் மீதிகளை ஒப்பிடும் போது வித்தியாசமொன்று இருப்பதாக கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நேரொத்த அறிக்கையை பேணிக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | கூமொவி நிறுவனத்திலிருந்து சபைக்கு மீள் திருப்பி அனுப்பப்பட்ட தேயிலையின் பெறுமதி | 3,482,941 | 3,450 | 3,479,491 | கூமொவி நிறுவனத்தினால் ஜனவசம் இற்கு பணம் செலுத்தும் போது வழங்கப்படும் இணக்க அறிக்கை பிரகாரம் ஜனவசமிற்கு திருப்பி அனுப்பிய தேயிலை இருப்பு கிடைத்திருக்கவில்லை. அதனால் 2011 பெப்ரவரி 23 திகதி களஞ்சியத்தில் உள்ள தேயிலை இருப்பு பதிவேடுகளின் பிரகாரம் மீதி | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நேரொத்த அறிக்கையை பேணிக் கொள்ள வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபக னத்திலிருந்து பெறவேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி | 119,346,347 | 97,709,342 | 21,637,005 | இந்த மீதி பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி 2020 ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நேரொத்த அறிக்கையை பேணிக் கொள்ள வேண்டும். |
| (ஊ) | பிரதான அலுவலகத்தின் வாடகை கொள்வனவு நிச்சயமற்ற வட்டி வருமானம். | 585,032 | 532,168 | 52,864 | 2019 கணக்கு திருத்தத்தின் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நேரொத்த அறிக்கையை பேணிக் கொள்ள வேண்டும். |
| (எ) | வாடகை கொள்வனவு பொறுப்புக்கள் | 852,991 | 1,064,000 | 211,009 | 2019 கணக்கு திருத்தத்தின் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நேரொத்த அறிக்கையை பேணிக்கொள்ள வேண்டும். |
| (ஏ) | ஜனதே பிரிவின் வியாபார பெற வேண்டிய மீதி | 28,995,786 | 29,390,337 | 394,551 | ஜனதே பிரிவின் வியாபார பெற வேண்டிய மீதியை 2019 கணக்கு திருத்தத்தின் போது சரிசெய்யப்படும். | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நேரொத்த அறிக்கையை பேணிக் கொள்ள வேண்டும். |
| (ஐ) | செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 8,369,467 | 1,182,458 | 7,187,009 | பொருளாதார சேவைக் கட்டணம் அட்டுறு அடிப்படையிலும் வருமான வரி காசு அடிப்படையில் மேற்கொண்ட காரணத்தால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நேரொத்த அறிக்கையை பேணிக் கொள்ள வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | தோட்டங்களின் பணிக்கொடை செலுத்தல் | 616,860,963 | பணிக்கொடை செலுத்தும் அட்டவணைகள் | இந்த ஐயவினாக்குரிய விடை 2021.04.08 திகதிய கடிதம் பிரகாரம் ஜோஈபீ/2022/தகவல்/14 கொண்ட ஐயவினாவிற்கான பதிலின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. | பணிக்கொடை செலுத்தல் அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இறுதி இருப்பு கணக்கெடுப்பு மற்றும் மீதி உறுதிப்பாடு | 109,527,017 | பௌதீக இருப்பு ஒப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்பாடு | ஐந்தொகை திகதியன்று இருப்பு கணக்கெடுக்கும் போது கிரயத்தின் மீது கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது. அக் கணக்கெடுப்பை உறுதி செய்வதற்காக நுகர்வோர் பிரிவிற்கு உரிய இருப்பு ஒப்பாய்வு பதிவேடுகள் 2022 மார்ச் 26 ஆம் திகதி கணக்காய்வு பிரிவிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளன. | இறுதி இருப்பிற்குரிய விரிவான இருப்பு ஒப்பாய்வு அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் இறுதி இருப்பின் பெறுமதியை சரியாக நிதிக்கூற்றிற்கு எடுக்கவேண்டும். |
| (இ) | மீள் திருப்பி அனுப்பப்பட்ட தேயிலை | 2,177,332 | பௌதீக ஒப்பாய்வு இருப்பு அறிக்கை | கணக்கு குறிப்புகளை தயாரிப்பதற்காக திருப்பி அனுப்பிய இருப்புகள் வேறான கணக்கொன்றில் கணக்கீடு செய்வதனால் இந்த பேரேட்டு கணக்கு மீதி உருவாகியுள்ளது. அதற்காக பௌதீக இருப்பு ஒப்பாய்வு அறிக்கையை சமர்ப்பிக்க முடியாமலிருந்தது. | ஐந்தொகை திகதியில் நிலவிய மீள் திருப்பி அனுப்பிய இருப்பு, பௌதீக ரீதியாக ஒப்பாய்வு செய்து அறிக்கையை கணக்காய்விற்கு வழங்க வேண்டும். |
| (ஈ) | கடன்கொடுனர் மீதி | 440,754,273 | மீதி உறுதிப்பாட்டு கடிதம் மற்றும் பிற்கால தீர்தல்கள் தொடர்பான தகவல்கள் | சீ.ஐ.சீ. எக்ரோ கம்பனியினால் உரிய ஆண்டுக்காக மீதி உறுதிப்பாட்டு கடிதங்கள் கிடைத்திருக்காததுடன் அரச அமைச்சுகளின் கீழ் காணப்பட்ட் கூட்டுத்தாபனம், சபைகள், மற்றும் கம்பனிகள் | கடன்கொடுனர் மீதி உறுதிபாட்டு கடிதங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் கடன்கொடுனர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தற்போது மூடப்பட்டுள்ளன. இலங்கை தேயிலை சபை, இலங்கை கனிய மணல், இலங்கை பீங்கான் கைத்தொழில் கூட்டிணைந்த சபை, மக்கள் வங்கி, பான் ஏசியா வங்கி போன்ற நிறுவனங்களிலிருந்து மீதி உறுதிப்பாடுகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்த போதும் இது வரை மீதி உறுதிப்பாடுகள் வழங்கப்படவில்லை. | மீதியை சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | செயற்பாடின்றி காணப்படும் ஓனுகல்ஓய தோட்டத்தின் நிலையான சொத்துக்கள் | 6,013,927 | நிலையான சொத்துக்கள் அட்டவணை | இந்த மீதிகள் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு கட்டுப்பாட்டு அதிகாரசபையின் அனுமதியின் மீது 2022 ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் பௌதீகமாக இல்லாத சொத்து மீதிகள் முறையான பரிசோனையின் பின்னர் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | நிலையான சொத்துக்கள் கொள்வனவு | 5,189,962 | நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்குரிய வவுசர்கள் மற்றும் பட்டியல்கள் | நிலையான சொத்துக்கள் ஆண்டினுள் கொள்வனவு செய்ததனை உறுதிப்படுத்த நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்திக் கொள்ள தேவையான அடிப்படை ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | முதன்மை மற்றும் நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களிற்கு உரிய ஆண்டின் | 30,095,968 | கொடுப்பனவு வவுசர்கள், ஜர்னல் வவுசர்கள், பட்டியல்கள் | மீளாய்வாண்டினுள் திரட்டப்பட்ட முதன்மை மற்றும் நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை உறுதிப்படித்திக் கொள்ள தேவையான ஆவணங்களை | முதன்மை மற்றும் நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை உறுதிப்படித்திக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திரட்டல்கள் | | | கணகாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | கொள்ள தேவையான வவுசர்கள், ஜர்னல்கள் மற்றும் பட்டியல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | வாடகை கொள்வனவு உடன்படிக்கை | 38,553,244 | ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட வாடகை கெள்வனவு உடன்படிக்கை. | மொன்தோ கிறிஸ்தோ தோட்டத்தை 2003 அளவில் தனியார் பிரிவிற்கு குத்தகை வழங்கும் போது கணக்கு புத்தகங்களில் இருந்த சொத்துக்கள் பிரதான அலுவலகத்திற்கு மாற்றப்பட்டதுடன் பொறுப்புக்கள் அச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டன. பின்னர் 2017 ஜுன் மாதமளவில் இந்த தோட்டம் நாவளப்பிட்டி பிளான்டேஷன் தனியார் சபை எனும் பெயரில் அறிமுகப்படுத்தும் சபையொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டதுடன், அத் தோட்டத்திற்குரிய சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் பிரதான அலுவலகத்தின் புத்தகங்களில் அவ்வாறே காணப்படுகின்றன. இது தொடர்பாக 2019 கணக்குகள் ஊடாக அச் சொத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகை வாடகை உடன்படிக்கையைய கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேணடியதுடன், வாடகை கொள்வனவு சொத்துக்களை சரியாக கணக்கு வைத்தல் மற்றும் தேவையான வெளிப்படுத்தல்களை நிதிக்கூற்றினுள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | வாடகை கொள்வனவு கடன்கொடுனர் மீதி | 4,087,333 | கடன்கொடுனர் மீதி உறுதிப்பாட்டு மற்றும் வயதுப் பகுப்பாய்வு | தோட்டங்களிலில் இருந்து செலுத்த வேண்டிய குத்தகை வாடகை கடன்கொடனர் மீதிகளின் பெறுமதி 2018.12.31 திகதியன்று ரூபா 4,087,333 தொகையொன்று காட்டப்பட்டுள்ளது கணக்கு வைக்கும் தவறொன்றின் காரணமாவதால் அம்மீதி 2020 கணக்கு ஆண்டின் போது சரி செய்யப்பட்டுள்ளது. | மீதி உறுதிப்பாட்டை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | தனியார் கணனி மென்பொருல் | 852,991 | செலுத்த வேண்டிய மீதி | தனியார் கம்பனியொன்றிற்கு செலுத்த வேண்டிய வாடகை | செலுத்த வேண்டிய மீதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்குனர் கம்பனியொன்றிற்கு செலுத்த வேண்டிய மீதி | | உறுதிப்பாடு மற்றும் வயது பகுப்பாய்வு | கெள்வனவு பெறுமதி ரூபா 852,991 ஆன மீதிக்கான மீதி உறுதிப்பாட்டுக் கடிதம் கிடைத்திருக்கவில்லை. | தொடர்பாக மீதி உறுதிப்பாடு மற்றும் வயதுப் பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஓ) | வாடகை கொள்வனவு நிச்சயமற்ற வட்டி | 1,361,403 | வாடகை கொள்வனவு நிச்சயமற்ற வட்டி தொடர்பான உறுதிப்பாடு, வயதுப் பகுப்பாய்வு | ரூபா 776,371 ஆன மீதி 2007 ஆண்டிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்படும் மீதியாகையால் தகவல்களை கண்டறிவது கடினமாக உள்ளது. இந்த தவறான கணக்கீடு 2020 ஆண்டில் சரிசெய்யப்பட்டுள்ளது. | ஆரம் மீதிகளிற்கு உரிய தகவல்களை பெற்று தவறான கணக்கீட்டை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | நிதி வாடகை கொள்வனவு பெறுமதி | 136,160 | வாடகை கொள்வனவு உடன்படிக்கை | இந்த வாடகை கொள்வனவு பெறுமதியினால் பிரதிபழிப்பது தனியார் பினேன்ஸ் நிறுவனமொன்றிற்கு செலுத்த வேண்டிய மீதியொன்றாகுமென. இதன் சரியான தன்மையை பரீட்சித்துப் பார்த்து 2022 கணக்கு திருத்தத்தின் போது சரிசெய்கிறேன். | செலுத்த வேண்டிய இந்த வாடகை கொள்வனவு மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக பரீட்சித்துப் பார்த்து தேவையான சீராக்கங்களை தாமதமின்றி மேற் கொள்ள வேண்டும். |
| (க) | வாடகை கொள்வனவு முற்பணம் | 50,353,716 | மீதி உறுதிப்பாடு மற்றும் காலப் பகுப்பாய்வு | நிறுவனங்கள் 2 இனால் 2018.12.31 திகதிக்கு அனுப்பியுள்ள மீதி உறுதிப்பாட்டு அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். ஏனைய நிறுவனங்களிடமிருந்து மீதி உறுதிப்பாடுகள் கிடைக்கவில்லை. | வாடகை கொள்வனவு முற்பண மீதியை உறுதி செய்து கொள்ள தேவையான் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும் |
| (கா) | இனங்காணப்படாத வைப்பு பெறுமதி | 6,461,737 | வைப்பு மீதி உறுதிப்பாடு | நேரடியாக வங்கியில் வைப்புச் செய்துள்ள உடனடியாக இனங்காண முடியாத பெறுவனவுகள் இந்த பேரேட்டு கணக்கில் கணக்கீடு செய்து குறித்த பெறுவனவுகள் இனங்காணப்பட்ட பின்னர் சரியான கண்கிற்கு | நேரடி வைப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கணக்கீடு செய்யப்படும். | |
| (கி) | வைப்பு/ குத்தகை ஆதனங்களிற்கான முற்பணம் | 93,024,351 | மீதி உறுதிப்பாடு மற்றும் வயதுப் பகுப்பாய்வு | குத்தகை ஆதனங்களிற்கான பேரேட்டு மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக பிரச்சினையான நிலைமை உறுவாகியுள்ளது. | குத்தகை ஆதன பேரேட்டு மீதிகளின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள தேவையான சான்றுகளை கணக்காய்விற்க சமர்பிக்க வேண்டும். |
| (கீ) | கொத்மைல நீர்தேக்க கருத்திட்டத்திற்காக மஹவெலி அமைச்சினால் வழங்கியிருந்த கடன் | 40,548,258 | கடனிற்கான எழுத்துமூல உறுதிப்பாடு | அவதானிப்புடன் இணங்குகிறேன். | கடனிற்கான எழுத்துமூல சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |
| (கு) | நானாவித, ஜனதேயிலை, வியாபார மற்றும் பிரதான அலுவலக கடன்படுனர் மீதி, பிரதான அலுவலகத்துடன் தோட்ட்ங்கள் மற்றும ஜனதேயிலை பிரிவினை நடாத்திச் செல்லும் கட்டுபபாட்டு கணக்குகளின் மீதி | 671,352,252 | மீதி உறுதிப்பாடு மற்றும் வயதுப் பகுப்பாய்வு | இந்த கடன்படுனர் தொடர்பாக அறவிடுவதற்காக தற்போது முறையான வேலைத் திட்டமொன்று எடுக்கப்பட்டுள்ளது. ஜனதேயிலை பிரிவின் பழைய கடன்படுனர் மீதிகள் 2004 ஆண்டு முதல் நிலவுகின்றன. தேவையான பின்னூட்டல் செய்யப்படும். | கடன்படுனர் மீதி உறுதிப்பாடு மற்றும் வயதுப் பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டியதுடன், கடன்படுனர்களை அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |
| (கூ) | நிறுத்தி வைத்தல் வரி | 9,670,772 | குறித்த நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ் | தற்போது நிதிப் பிரிவில் உள்ள சில வரி நிறுத்தி வைத்தல் சான்றிதழ்களை இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றன. | கணக்கில் காட்டப்படும் பெறுமதிக்குரிய நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | வெளித்தரப்பினரிற்கு தேயிலை கொழுந்து விற்பனை செய்வதன் காரணமாக 2018 திசெம்பர் 31 அளவில் ரூபா 33,196,752 ஆன கடன்படுநர் மீதியொன்று காணப்படுகின்றது. தேயிலை கொழுந்து விற்பனையின் போது 14 நாட்கள் அளவான கடன் காலமொன்று வழங்கப்பட்ட போதும், மேற்குறித்த ரூபா 28,183,139 ஆன கடன்படுநர் மீதி, 2003 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை பழமையான போதும், இந்த பழைய மீதியை அறவிட சபைக்கு இயலாதிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். பல்வேறு நிறுவனங்களிற்கு தேயிலை கொழுந்துளை கடன் அடிப்படையில் விற்பனை செய்ததால் 2018 திசெம்பர் இறுதியளவல் பெற வேண்டிய நிதி இதில் காணப்படுவதுடன் வழக்கு நடவடிக்கைகள், மற்றும் வேறு விடயங்களின் மீது அவற்றை மீள் அறவிட முடியாதுள்ளதுடன் எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | பழைய மீதிகளை அறவிட தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1999 முதல் 2016 வரையான ஆண்டுகளிற்குரிய ரூபா 4,008,885 ஆன பழைய 33 கடன்படுநர் மீதிகள் தோட்டங்களின் காணப்படுகின்ற போதும், அம் மீதிகளை அறவிட அல்லது நிதிக்கூற்றுக்களில் ஐயக்கடன் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கணக்குகள் மூலம் பிரதிபழிக்கும் மீதிகளிற்கு இடையே அனைத்து செலவுகளும் மூலதன தன்மையை கொண்டிருந்தது. அந்த செலவுகளின் சரியான தன்மையை தோட்டங்களின் மூலம் உறுதி செய்து கொண்டு 2020 கணக்காண்டில் மூலதனமாக்க அல்லது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்படுநர் மீதிகளை அறவிட மற்றும் பழைய கடன்படுநர்களிற்காக உரிய ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஜன தேயிலை பிரிவின் மொத்த கடன்படுநர் மீதி ரூபா 29,390,337 ஆனதுடன், கடன்படுநர் வயது பகுப்பாயின் பிரகாரம் 90 நாட்களுக்கு அதிக கடன்படுநர் மீதி ரூபா 21,748,690 ஆனது. அம் மீதிகளிற்கிடையில் ஓராண்டிலும் அதிக ஒட்டுமொத்த கடன்படுநர் ரூபா 11,625,553 ஆனதுடன், அம் மீதிகள் பல ஆண்டுகள் பழமையான போதும் இந்த மீதிகளை அறவிட அல்லது ஐயக்கடன் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கடன்படுநர் மீதிகளை அறவிடும் எதிர்பார்ப்பில் நடவடிக்கை எடுத்துள்ளதால் ஐயக்கடன் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அறவிட மேற்கொண்டுள்ள தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | கடன்படுநர் மீதிகளை அறவிட மற்றும் பழைய கடன்படுநர்களிற்காக உரிய ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு காணப்பட்ட மீதிகளிற்கடையில் தெரிவு செய்யப்பட்ட கடன்படுநர் மீதி ரூபா 288,839,894 இற்காக 2022 மார்ச் 15 திகதி வரையும் கடன்படுநர்களினால் தீர்த்து இருந்தது ரூபா 8,856,575 மாத்திரம் ஆனதுடன், அத் தீர்ப்பனவு | 2018 திசெம்பர் 31 திகதிக்கு காணப்பட்ட கடன்படுநர் மீதிகளில் காணிப் பிரிவிற்குரிய பெற வேண்டிய குத்தகை வாடகை மற்றும் அலுவலக வாடகை இந்த மீதிகளினால் காண்பிக்கப்படுகின்றன. குறித்த | கடன்படுநர்களிடமிருந்து பணம் அறவிடுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு இருந்தது 2019 ஆண்டின் ஆகும். அதன் பிரகாரம் குறிப்பிட்ட மீதிகளிற்கு இடையில் ரூபா 279,983,319 இனை அறவிடும் இயலுமை காணப்படுவதில்லை என அவதானிக்கப்பட்டது. | திருத்தங்கள் 2021 மற்றம் 2022 கணக்காண்டுகளினூடாக செய்து சமர்ப்பிக்கப்படும். | வேண்டியதுடன், கணக்குகளில் காணப்படும் அறவிட முடியாத மீதிகள் தொடர்பாக தேவையான செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீயாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளிலில் அறவிட முடியாததாக இனங்காணப்பட்ட ரூபா 11,190,988 பெறுமதியான கடன்படுனர் மீதிகளை செம்மையாக்கலாக (Adjustment) நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கியிருந்ததன் காரணமாக மேற்குறிப்பிட்ட பெறுமதியினால் நடைமுறை சொத்துக்கள் மிகை மதிப்பீடாகி உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | இந்த கணக்கின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட தோட்டங்களில் இருந்த அறவிட முடியாத கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் மீதிகளின் தேறிய பெறுமதியாகும். தேவையான உறுதிப்படுத்தல்களை மேற்கொண்டு மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் 2022 ஆண்டில் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பொருண்மையான உறுதிப்பாடுகளின் மீது மற்றும் தேவையான அங்கீகாரத்தின் ஊடாக மாத்திரம் கடன்படுனர்களை பதிவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதி வரை வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளினுள் தோட்டங்களிற்கு இடையில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களை உரியவாறு தீர்த்துக் கொள்ளாத காரணத்தால் தீர்க்கப்படாத ரூபா 36,833,017 ஆன 7 செலவுகள் மீதிகள் அவதானிக்கப்படுவதுடன், குறித்த பெறுமதியை 2018 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் போதும் தீர்க்கப்படுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மீது பதிவழிக்க அல்லது தகவல்களை கண்டறிந்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | தோட்டங்களிற்கு இடையில் காணப்டும் மீதிகளை தாமதமின்றி தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் கடன்கொடுனர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ஆண்டு 1 முதல் 5 ஆண்டு வரை தீர்க்கப்படாத மீதிகள் ரூபா 15,663,093 மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சியுள்ள இதுவரை தீர்க்கப்படாத மீதகள் ரூபா 103,092,804 ஆனதுடன், குறித்த மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்தில் நிலவிய மற்றும் தற்போதும் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக இந்த கடன்கொடுனர்களை தீர்க்க முடியாதுள்ளது. எவ்வாறாயினும் நிதி நிலைமை சாதமாகும் போது தேவையான கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | கடன் மீதிகளை தீர்க்க துரித செயற்பாடொன்றை தாமதமின்றி செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையின் 18 தோட்டங்களில் ரூபா 32,545,313 பெறுமதியான விழா முற்பண மீதி காணப்படுவதுடன் அவை 2000 ஆண்டு முதல் நிலவி வரும் இந்த பழைய மீதிகளிற்கு இடையே ரூபா 252,185 ஆன விழா முற்பணம் உருவாகியுள்ள விதம் தொடர்பான தகவல்கள் சபையிடம் இருக்கவில்லை. | இந்த காலப் பகுதியினுள் ஊழியர்கள் மரணித்தல், சேவையிலிருந்து நீக்குதல், கடமையை விட்டுச் செல்லல் ஆகிய விடயங்களினால் அறவிட முடியதென தோட்டங்கள் கூறுகின்றன. எவ்வாறாயினும் தோட்டங்களிலிருந்து நீங்கிய ஊழியர்கள் சேமலாப நிதியம் மற்றும் பணிக்கொடை நிதியத்தை மீள் பெற்றுக் கொள்வதற்குரிய தகவல்களை பெற்றுக் கொள்ள தோட்டங்களிற்கு வருகை தந்த மற்றும் வருகைதரும் சந்தர்ப்பங்களில் தோட்டங்களினால் அந்த நிலுவைத் தொகையை அறவிடுதல் செயற்படுகின்றது. ரூபா 252,185 ஆன நிலுவை விழா முற்பணத்தினுள் குறித்த அலுவலர்களின் பெயர்கள் மற்றும் நிலுவைகளை கண்டுகொள்ள முடியாதுள்ளது. குறித்த அலுவலர்களின் பெயர் பட்டியல் மற்றும் நிலுவைகளை கண்டறிந்து சமர்ப்பிக்குமாறு தோட்டங்களிற்கு ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | விபரங்களை கண்டறிந்து தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் II ஆன பகுதியின் 5 (1) ஆம் உப பிரிவு | ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற அல்லது மரணித்த திகதியிலிருந்து 30 நாட்களில் பணிக்கொடை செலுத்த வேண்டிய போதும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் அவ்வாறு செய்திருக்கவில்லை. மேலும் பணிக்கொடையாக அறவிட வேண்டிய ஒரு சில தொகையை செலுத்த மறுக்கும் ஏதேனும் சேவைவழங்குனர் பணிக்கொடையாக அறவிட வேண்டிய தொகைக்கு மேலதிமாக சட்டத்தின் பிரிவின் பிரகாரம் கணக்கிட்டு மிகையறவீடு செலுத்த வேண்டும். அதன் பிரகாரம் சபையினால் பணிக்கொடை தொகையை உரிய தினத்தில் செலுத்தாத காரணத்தால் 2018 ஆண்டு இறுதியளவில் ரூபா | நீண்ட காலமாக நிலவும் நிதி நெருக்கடி காரணமாக பணிக்கொடை உரியவாறு செலுத்தாததால் நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்படும் வழக்கு தீர்ப்பின் மூலம் கொடுப்பனவு செய்யும் போது மிகையறவீட்டை கணிப்பிட்டு பணிக்கொடை | பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பிரகாரம் உரிய காலத்தில் பணிக்கொடை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 143,202,687 ஆன தொகையொன்றை மிகை அறவீடாக செலுத்த வேண்டி இருந்தது. | தொகை செலுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவை<br>(i) நி.பி. 387 | காசோலை மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளிற்கும் தனது வங்கி மீதி போதியதாக உள்ளதா என செலுத்தும் அலுவலரினால் அடிக்கடி அறிந்துகொள்ள வேண்டியதுடன், எந்தவொரு அரச வங்கிக் கணக்கிலிருந்தும் மேலதிக பற்று பெற்றுக் கொள்வது தடையென அறிவித்ததுள்ள போதும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் இலங்கை வங்கி, நேஷன் ரிரஸ்ட் வங்கி மற்றும் மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படும் 4 கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 60,977,905 ஆன தொகையொன்றை 2018 ஆண்டு இறுதியில் வங்கி மேலதிக பற்றாக பேணியிருந்த காரணத்தால் ரூபா 8,348,209 ஆன பற்று வட்டியொன்றை செலுத்தி இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புடன் இணங்கியுள்ளது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் மேலதிக பற்று வசதிகளின் மீது கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கக் கூடாது. |
| | (ii) நி.பி. 395(இ) | ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அடுத்து வரும் மாதத்தில் 15 ஆம் திகதிற்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதும், 10 வங்கி மீதிகளிற்காக வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | தற்போது வங்கி இணகக்கூற்று தயாரித்து கணக்காய்விற்கு சமர்பிக்கப்படும். | நிதிப்பிரமாணம் பிரகாரம் வங்கி இணக்கக்கூற்றை உரிய காலத்தினுள் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி சட்டத்தின்<br>(i) அட்டவணை I இன் XIV பிரிவு | கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் விற்பதற்காக பதிவு செய்த தரகர் ஒருவருக்கு வழங்கப்படும் தேயிலை இந்த சட்டத்தின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட போதும் ஏனைய தேயிலை விற்பனை வருமானம் வரியிற்கு உட்படுகிறது. இதன் பிரகாரம் சபையினால் தேயிலை ஏலவிற்பனை தவிர நுகர்வோர் தேயிலை விற்பனை வருமானம் ரூபா 156,645,783 தொகை வரிக்கு உட்படுகிறது. இதன் பிரகாரம் கவனத்திற் கொள்ளும் போது வரி ரூபா 3,132,915 யினால் குறை மதிப்பீடுசெய்து கணக்கிடப்பட்டிருந்தது. | ஏனைய தேயிலை விற்பனை வருமானத்தின் மீது செலுத்த வேண்டிய வரி நிறுவனத்தில் காணப்பட்ட நிதி நெருக்கடி காரணமாக 2018 ஆண்டினுள் தேசத்தை கட்டியெழுப்பம் வரியை செலுத்தி இருக்கவில்லை. | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி சட்டத்தின் ஏற்பாடு பிரகாரம் விற்பனை வருமானத்திற்காக வரி கணக்கிடப்பட்டு செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 2 (i) (இ) பிரிவு | ஏனைய வருமான தலைப்பின் கீழ் கிடைக்கும் வருமானம் விரிக்கு | 2018 ஆண்டிற்கான | 2009 இன் 09 ஆம் இலக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உட்பட வேணடிய போதும் 2018 ஆண்டில் ரூபா 37,796,794 ஆன காணி குத்தகை வாடகை வருமானம் மற்றும் ரூபா 2,368,987 ஆன ஏனைய வருமானத்திற்காக தேசத்தை கட்டியெழுப்பும் வரி செலுத்த சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 803,315 (40,165,781*2%) இனால் குறை மதிப்பீடு செய்து கணக்கிடப்பட்டிருந்தது. | காணி மற்றும் குத்தகை வாடகைக்காக தேசத்தை கட்டியெழுப்பும் வரி செலுத்தப்படவில் லை. | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் வருமானத்திற்கு வரி கணக்கிடப்பட்டு செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (iii) 4 ஆம் உப பிரிவு | சபை தேசத்தை கட்டியெழுப்பும் வரியை உரிய திகதியில் கணக்கிட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தி இருக்காததால் 2018 திசெம்பர் 31 திகதி ரூபா 1,182,458 ஆன நிலுவை வரி காணப்பட்டது. | நிறுவனத்தில் காணப்பட்ட நிதி நெருக்கடி காரணமாக 2018 ஆண்டினுள் தேசத்தை கட்டியெழுப்பவும் வரி செலுத்தப்படவில் லை. | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி சட்டத்தின் ஏற்பாடு பிரகாரம் வருமானத்திற்கு வரி கணக்கிடப்பட்டு செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2006 இன் 13 இலக்க பொருளாதார சேவை கட்டணச் சட்டம்<br>(i) 2 ஆம் பிரிவு | காலாண்டிற்கான வருமானம் ரூபா 10 மில்லியனை விஞ்சும் ஒவ்வொரு நிறுவனமும் வரியிற்கு உட்பட வேண்டிய போதும் சபை அதற்கு ஒத்ததாக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், கவனத்தில் கொள்ளும் நிதி ஆண்டில் மொத்த விற்பனை ரூபா 818,735,838 ஆனதுடன் இதற்காக பொருளாதார சேவைக் கட்டணமாக ரூபா 2,046,839 தொகையை (818,735,838 * 0.25%) செலுத்த வேண்டிய போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மேலும் ரூபா 6,357,269 இனை ஐந்தொகையில் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணமாக தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது. | 2012 ஆண்டு முதல் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் தீர்மானத்தின் மீது கொடுப்பனவு இடை நிறுத்தப்பட்டது. | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 6 ஆம் உப பிரிவு | வரிகுட்படும் விற்பனையை விஞ்சும் ஒவ்வொரு நிறுவனமும் காலாண்டு முடிவடைந்து அடுத்து வரும் மாதத்தில் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பொருளாதார சேவை கட்டணத்தை செலுத்த வேண்டிய போதும், சபை 2012 ஆண்டு முதல் 2019 நிதியாண்டு | 2012 ஆண்டு முதல் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் தீர்மானத்தின் மீது கொடுப்பனவு இடை நிறுத்தப்பட்டது. | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரை அறிக்கை ஒப்படைத்தல் அல்லது கட்டணம் செலுத்தல் மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் சட்டத்தின் 10 ஆம் பிரிவு பிரகாரம் ஏதேனும் சேவை கட்டணத்தை சட்டத்தின் 6 ஆம் பிரிவு பிரகாரம் குறிப்பாக காட்டியுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் ஏதேனும் காலாண்டிற்குரிய சேவை கட்டணத்தை அல்லது அதன் ஒரு பகுதியை செலுத்தி இருக்காத போது அதனை புறக்கணித்ததாக கருதுவதுடன், சபையின் அனைத்து பணிப்பாளரிற்கும் அல்லது ஏனைய பிரதான அலுவலர்களுக்கும் சட்டத்தின் கடமைக்காக புறக்கணித்தவராக கவனிக்க முடியுமாகும். | | |
| (உ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம்<br>(i) 90 ஆம் பிரிவு | நபரொருவர் அல்லது பங்குடமை வியாபாரமொன்று சுயமதிப்பீட்டு அடிப்படையில் காலாண்டு முடிவில் உள்நாட்டு இறைவரி தினக்கலைத்திற்கு முறையே ஆகஸ்ட் 15, நவம்பர் 15, பெப்ரவரி 15 மற்றும் அடுத்த ஆண்டின் மே 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வருமான வரி செலுத்த வேண்டும். எஞ்சிய வரித் தொகையொன்று இருப்பின் அதனை அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டும். எனினும் சபை 2018 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய வருமான வரியை 2021 ஜுன் 22 திகதி அளவிலும் செலுத்தி இருக்காததுடன், வருமான வரி பொறுப்பையும் கணக்கிட்டு இருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்ட பிரகாரம் வருமான வரிப் பொறுப்பை கணக்கிட்டு செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 93 ஆம் பிரிவு | ஒவ்வொறு மதிப்பீட்டாண்டும் முடிவடைந்த பின்னர் 08 மாதங்களிற்கு குறையாத காலத்தினுள் அந்த மதிப்பீட்டாண்டிற்காக வருமான அறிக்கையொன்றை உள்நாட்ட இறைவரி திணைக்களத்திற்கு ஒப்படைக்க வெண்டிய போதும். சபை, 2018/2019 மதிப்பீட்டு ஆண்டுக்குரிய வருமான வரி அறிக்கையை 2021 ஜுன் 22 திகதிவரையும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒப்படைத்திருக்கவில்லை. | வரி அறிக்கையை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வருமான வரி அறிக்கையை உரிய காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஊ) | 1958 இன் 15 ஆம் இலக்க | ஊழியர் ஒருவரின் சேவை வழங்குனரால், இந்த சட்டத்தின் கீழ் | 2001 ஆண்டு முதல் நிலவிய | ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு | அவ்வாறான ஊழியரின் ஒவ்வொரு மாதத்தினதும் பங்களிப்புத் தொகையை அந்த ஊழியரின் உழைப்பிலிருந்து கழித்து அடுத்த மாதம் இறுதி திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு செலுத்த வேண்டும். எனினும் சபை அவ்வாறு அந்த 2001 ஆண்டு முதல் 17 வருடங்களுக்கு கிட்டிய காலத்திற்காக செலுத்தாத ரூபா 342,193,295 ஆன தொகையொன்று செலுத்த வேண்டிய சேம நிதியமாக காணப்பட்டது. | நிதி நெருக்கடி காரணமாக உரிய திகதியில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி செலுத்துவது இடைநிறுத்தப்பட்டது. திறைசேரியில் இருந்து நிதி கிடைத்தவுடன் மற்றும் வழக்கு தீர்பின் மூலம் நியமிக்கப்படும் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டது. | சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்படாத ஊழியர் சேமலாப பங்களிப்புத் தொகையை செலுத்த துரித வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |
| (எ) | 1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவு | ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் தொழில் வழங்குனரால் அந்த தொழிலாளர் தமது சேவையில் ஈடுபடுத்தும் ஒவ்வொரு மாதத்திற்காகவும், அந்த மாத்தினுள்ளே அந்த தொழில் வழங்குனரின் தொழிலில் ஈடுபட்டதற்காக அந்த தொழில் வழங்குனர் உழைக்கும் மொத்த ஈட்டுதலில் மூன்று சதவீதமான பங்களிப்புத் தொகையை அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் அந்த தொழிலாளர் தொடர்பாக நிதியத்திற்கு செலுத்த சேவை வழங்குனர் கீழ்படிய வேண்டிய போதும் சபையினால் 2011 ஆண்டு முதல் 7 ஆண்டுகளுக்கு கிட்டிய காலமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 29,691,739 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதியிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் பிரகாரம் பங்களிப்புத் தொகையை உரிய காலங்களில் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 477,742,649 ஆன நட்டமாக காணப்பட்டதுடன் அதனோடு நேரொத்த கடந்த ஆண்டின் நட்டம் ரூபா 381,022,523 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 96,720,126 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிற்கு நிறுவனத்தின் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நுகர்வோர் தேயிலை விற்பனை வருமானம் ரூபா 178,475,834 இனால் குறைந்தமையும், இறப்பர் விற்பனை வருமானம் ரூபா 40,949,262 இனால் குறைந்தமையும், தேயிலை கொழுந்து மற்றும் தேயிலை இருப்பிற்குரிய விற்பனை கிரயம் ரூபா 66,971,610 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களில் போக்கு பகுப்பய்வு

மீளாய்வாண்டில் தேயிலை கொழுந்து விற்பனையால் கிடைத்த வருமானம் 2017 ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 35,168,636 இனால் அதாவது 6.7 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதுடன், தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களினால் கிடைக்கும் வருமானம் 2017 ஆண்டிற்கு ஒப்பாக முறையே ரூபா 178,475,834 இனால், ரூபா 40,949,292 இனால் மற்றும் ரூபா 25,463,756 இனால் அதாவது முறையே 53 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 55 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதுடன், 2017 ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆண்டில் தேயிலை கொழுந்து, ஜனதேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர் வளர்ப்புகளிற்குரிய கிரயம் முறையே ரூபா 66,971,610 இனால், ரூபா 73,743,967 இனால், ரூபா 154,879,673 இனால் மற்றும் ரூபா 1,712,488 இனால் அதிகரித்திருந்தன. இந்த கிரய அதிகரிப்பு சதவீதமாக முறையே 6 சதவீதம், 51 சதவீதம், 78 சதவீதம் மற்றும் 83 சதவீதமாக அவதானிக்கப்பட்டது.

## 2.3 விகித பகுப்பாய்வு

2017 ஆண்டில் மற்றும் 2018 ஆண்டில் சபையின் நடைமுறை சொத்து விகிதம் மற்றும் விரைவு விரைவு சொத்து விகிதம் 1:0.3 ஆக இருந்ததுடன் அதன் மூலம் சபைக்கு தனது நடைமுறை பொறுப்புக்களை தீர்க்கும் இயலுமை இல்லையெனவும், சபையின் நிலைத்திருக்கும் தன்மை ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேற்குறித்த விகிதத்தை மேலும் பகுப்பாயும் போது சபையின் மொத்த இலாப விகிதம் 21 சதவீதத்திலிருந்து 43 சதவீதம் வரையும் தேறிய இலாப வகிதம் 35 சதவீதத்திலிருந்து 58 சதவீத பெறுமானத்தால் தொடர்ந்தும் சீரற்றிருந்தன.

## 3. கணக்களிப்பொறுப்பும நல்லாளுகை

### 3.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் கணக்கு பிரிவிற்கு இணைக்கப்பட்ட கணக்கீடு மற்றும் நிதி முகாமையாளர், ஓர் ஆலோசகர், இரண்டு கணக்காளர்கள் மற்றும் 11 அலுவலர்கள் கடமையாற்றுவதுடன், அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 10.11 மில்லியனான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்த போதும், 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் 12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் 2017 மற்றும் 2018 ஆண்டுகளிற்கான நிதிக்கூற்றுக்களை 2019 ஒக்டோபர் 31 திகதிவரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

## 3.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆம் திகதிய இலக்கம் 12 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 பிரிவின் பிரகாரம் 03 மாதங்களிற்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டிற்காக 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கிறேன். 2018 ஆண்டு இறுதி காலாண்டில் நாட்டில் நிலவிய அரசியல் நிலையற்ற தன்மை காரணமாக பணிப்பாளர் சபை மாற்றமடைந்த காரணத்தால் கணக்காய்வு குழுவை நடாத்த முடியாமல் இருந்ததென அறிவிக்கிறேன். மேலும் 2017 ஆண்டில் 4 குழுக்கூட்டங்களும் 2019 ஆண்டில் இதுவரை 03 குழுக கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் உரியவாறு நடாத்தப்பட்டு அதனூடாக உள்ளக கட்டுப்பாடு மற்றும் நல்லாட்சி நோக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |